தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022

**8 வயதுப்பிரிவு**
(01.01.2014 – 31.12.2014 வரையில் பிறந்தோர்)

## உயிரினும் உயர்ந்த எம் தாய்நாடு

நாங்கள் ஈழத்தமிழர்கள். எங்களுடைய தாய்நாடு தமிழீழம். திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அம்பாறை, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, புத்தளம் மாவட்டக் கரையோரம் அடங்கிய நிலப்பகுதி தமிழீழம். எங்கள் தாயகத்தின் மீது நாங்கள் பேரன்பு கொண்டுள்ளோம்.

எங்கள் தாய்நாட்டை ஐரோப்பியர் ஆக்கிரமிக்கும் வரை எம் பண்டைய வீரர்கள் அதனைப் பாதுகாத்து வந்துள்ளனர். சிங்கள அரசுகளால் ஈழத்தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டபோது, தலைவர் மாமாவின் வழிகாட்டலிலே பல்லாயிரம் போராளிகள் தாய்நாட்டைக் காக்கப் போராடினார்கள். தாய்மண்ணைக் காக்கும் போரிலே தங்கள் உயிர்களை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.

தாய்நாட்டைக் காப்பது எம் அனைவரதும் கடமை. நாம் எமது தாய்மொழியைக் கற்பதோடு மட்டுமல்லாமல், எம் தாய்நாட்டையும் மீட்டு எம் உறவுகள் சுதந்திரமாக வாழ வழி அமைக்க வேண்டும். வளர்ந்து வருகின்ற சிறுவர்களாகிய நாம், அனைவரும் ஒன்றிணைந்து உயிரினும் மேலான எம் தமிழீழத்தை மீட்போம்.

நன்றி,

வணக்கம்.